# வலயக்கல்வி அலுவலகம் - வவுனியா வடக்கு

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2022

### சைவ சமயம்

Zonal Education Office- Vavuniya North Zonal Education Office- Vavuniya North Zonal Education Office- Vavuniya North Zonal Education Office- Vav

சுட்டெண் .................................................... | **தரம்: 09** | **நேரம் -2.30 மணித்தியாலம்**

## பகுதி I

- **சரியான விடையின் கீழ் கோடிடுக.**

1) சைவ சமயத்தின் முழுமுதற் கடவுள்?
   1) சிவபெருமான்   2) விஸ்ணு   3) முருகன்   4) பிள்ளையார்

2) இறைவன் சோதிப் பிழம்பாகத் தோன்றிய நாள்?
   1) திருக்கார்த்திகை   2) திருவாதிரை
   3) சிவராத்திரி   4) பிரதோஷம்

3) "அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத்..." என்ற குறள் மூலம் வெளிப்படுத்தப்படுவது?
   1) கூட்டுப் பொறுப்பு   2) சகிப்புத் தன்மை
   3) நிலத்தின் தன்மை   4) பொறாமை

4) திருஞானசம்பந்தருக்கு திருமணம் நடைபெற்ற தலம்?
   1) திருகோலக்கா   2) திருவீழிமிழலை   3) சீர்காழி   4) திருநல்லூர்ப்பெருமணம்

5) சந்திரன் ஒவ்வொரு நட்சத்திரத்தையும் கடக்க எடுக்கும் காலப்பகுதி
   1) திதி   2) யோகம்   3) பட்சம்   4) கரணம்

6) ஐந்தாம் குரவர் எனப் போற்றப்படுபவர்?
   1) மாணிக்கவாசகர்   2) அருணாசல தேசிகர்
   3) நாவுக்கரசர்   4) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

7) இறந்த தந்தையின் பொருட்டு அனுட்டிக்கும் விரதம்?
   1) ஆடி அமாவாசை   2) திருவாதிரை   3) ஏகாதசி   4) சித்திரா பௌர்ணமி

8) "யாவர்க்குமாம் உண்ணும் போது ஒரு கைப்பிடி" எனக் கூறியவர்?
   1) விபுலானந்தர்   2) திருமூலர்   3) விவேகானந்தர்   4) சேந்தனார்

9) புரட்டாதி மாதத்தில் அமாவாசையை அடுத்துவரும் பிரதமை முதல் நவமி ஈறாக அனுட்டிக்கப்படும் விரதம்?
   1) விநாயகர் சதுர்த்தி   2) கேதாரகௌரி விரதம்
   3) கந்தசஷ்டி   4) நவராத்திரி

10) தட்சணாயன கால ஆரம்பத்துடன் தொடர்புடைய பண்டிகை?
   1) சித்திரை வருடப்பிறப்பு   2) தைப்பொங்கல்
   3) ஆடிப்பிறப்பு   4) தீபாவளி

11) நாலாயிர திவ்வியப் பிரபந்தத்துடன் தொடர்புடையவர்கள்?
   1) சந்தான குரவர்   2) ஆழ்வார்கள்   3) சமயக்குரவர்   4) சமயப்பெரியார்கள்

12) பதிகம் பாடும் மரபின் முன்னோடியாகத் திகழ்ந்த பெண்ணடியார்?
   1) திலகவதியார்   2) இசைஞானியார்
   3) காரைக்காலம்மையார்   4) மங்கயற்கரசியார்

13) சைவ நாற்பாதங்கள் எவை?
   1) அறம், பொருள், இன்பம், வீடு   2) சரியை, கிரியை, யோகம், ஞானம்
   3) கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல்   4) இயமம், நியமம், தியானம், சமாதி

14) இலங்கையின் மிக நீண்ட புனித பாத யாத்திரை தலமாக அமைவது?
   1) முன்னேஸ்வரம்   2) கதிர்காமம்
   3) களுதாவளைப்பிள்ளையார்   4) திருக்கேதீஸ்வரம்

15) கிரியை நெறி நின்று முத்தியடைந்தவர்?
   1) தண்டியடிகள்   2) சுந்தரர்   3) பூசலார்   4) மாணிக்கவாசகர்

16) நாலாயிர பிரபந்தத்தைத் தொகுத்தவர்?
   1) இராஜராஜசோழன்   2) நம்பியாண்டார் நம்பி
   3) நாரதர்   4) நாதமுனி

17) வீடுகளில் தீபம் ஏற்றும் போது பாடக்கூடிய தேவாரம்?
   1) "ஒளிவளர் விளக்கே..."   2) "எளியநல் தீபமிடல்..."
   3) "இல்லக விளக்கது..."   4) "ஓசை ஒலியெல்லாம்..."

18) மட்டக்களப்பு மாவட்டத்தில் பிறந்து சைவப்பணி புரிந்தவர்?
   1) சேர்.பொன்.இராமநாதன்   2) கா.அருணாசல தேசிகர்
   3) சேர்.பொன்.அருணாசலம்   4) சிவபாத சுந்தரனார்

19) பஞ்ச பாண்டவர்களில் சகிப்புத் தன்மையின் சிகரமாக விளங்குபவர்?
   1) வீமன்   2) நகுலன்   3) தருமர்   4) அருச்சுனன்

20) எம்மிடம் இருந்து அகற்ற வேண்டிய பண்பு?
   1) பொறுமை, பொறாமை, கோபம்   2) சகிப்புத்தன்மை, வஞ்சகம், அகிம்சை
   3) பொறாமை, கோபம், காமம்   4) நேர்மை, விட்டுக்கொடுப்பு, துரோகம்

( 20 × 2 = 40 புள்ளிகள் )

## பகுதி II

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01) பின்வரும் பாடல்களில் இரண்டினை வரிக்கிரமமாக எழுதி, பாடியவர், தலம் என்பவற்றைக் குறிப்பிடுக.

1) “துஞ்சலும் துஞ்சலில்லாத...”
2) “இல்லக விளக்கது...”
3) “காதலாகிக் கசிந்து....”
4) “காப்பதோர் வில்லும் அம்பும்....”
5) “மங்கையற்கரசி வளவை...”

(2 × 10 = 20 புள்ளிகள் )

02) ஒழுக்கமான வாழ்வு உயர்வைத் தரும்.

1) ஒழுக்கம் விழுப்பம் தரும் என்பதில் விழுப்பம் என்பதன் பொருள் யாது?
2) இலங்கையில் பிதுர்க்கடன் செய்யும் ஆலயங்கள் மூன்று தருக?
3) நாம் கடைப்பிடிக்க வேண்டிய சைவ விழுமியப் பண்புகள் ஐந்தினைக் குறிப்பிடுக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள் )

03) விரதங்களும் பண்டிகைகளும் வாழ்வை வளப்படுத்தும்

1) விரதம் என்பதன் பொருள் யாது?
2) விரத வகைகளை குறிப்பிட்டு உதாரணம் தருக?
3) ஆடிப்பிறப்பினை நாம் எவ்வாறு கொண்டாடுகிறோம் என விளக்குக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள் )

04) சைவப் பெரியார்களும் இறையடியார்களும் எமது சமயத்தை பாதுகாத்துள்ளனர்.

1) அருணாசலத் தேசிகரால் எழுதப்பட்ட நூல்கள் இரண்டைக் குறிப்பிடுக.
2) முதல் மூன்று ஆழ்வார்களும் யாவர்?
3) பாண்டிய நாட்டில் மங்கையற்கரசியாரின் சைவப்பணி பற்றி விளக்குக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள் )

05) “ஆலயம் தொழுவது சாலவும் நன்று”

1) தலயாத்திரை என்பதன் பொருள் யாது?
2) சைவநாற்பாதங்களில் நின்ற சமயக்குரவர்களைக் குறிப்பிடுக?
3) உம்மால் செய்யக் கூடிய சரியைத் தொண்டுகள் ஐந்து எழுதுக?

(2 + 3 + 5 = 10 புள்ளிகள் )